கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 03-10-2023**

**ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-03 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-10-04 | 2023-10-05 | 2023-10-06 | 2023-10-07 | 2023-10-08 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 33.0 | 34.0 | 34.0 | 34.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 24.0 | 24.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 22 | 20 | 18 | 16 | 18 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 200 | 200 | 180 | 180 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 6 | 7 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் அக்டோபர் 8ம் தேதியன்று லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலையானது 33 முதல் 34 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலையானது 24-25 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் சராசரியாக 50 முதல் 70 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 16 முதல் 22 கிலோ மீட்டர் வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் அக்டோபர் 8 முதல் அக்டோபர் 14 வரை மழை இயல்பைவிட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும்.

## குறுஞ்செய்தி:

விவசாயிகள் கடைசி உழவின் போது ஒரு ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் இடுமாறு அறிவுறுத்தப்படுகிறது..

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

**குறுஞ்செய்தி:**

[illegible]ல் அக்டோபர் 8 முதல் அக்டோபர் 14 வரை மழை இயல்பைவிட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும்.

| |
|---|
| விவசாயிகள் கடைசி உழவின் போது ஒரு ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் இடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.. |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | விவசாயிகள் மானாவாரி நெல் சாகுபடியில் தேவையான அளவு மணிச்சத்தினை பெற அடியுரமாக ஒரு ஏக்கருக்கு 100 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரம் இடுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். |
| நெல் | விவசாயிகள் மானாவாரி நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத்தில் விதையை கடினப்படுத்தி விதைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். விதை கடினப்படுத்த ஒரு கிலோ விதையை ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு சமவிகித கரைசலில் (10 கிராம், ஒரு லிட்டர் நீர் என்ற அளவில்) 16 மணி நேரம் ஊற வைத்து பின் அதன் பழைய ஈரப்பதத்திற்கே திரும்பும் வரை நிழலில் உலர்த்த வேண்டும். |
| நெல் | விவசாயிகள் மானாவாரி நேரடி நெல் விதைப்பு செய்யும் பட்சத்தில் இயந்திர விதைப்பானை பயன்படுத்துவதால் சரியான ஆழத்திலும் சரியான இடைவெளியை பராமரிப்பதன் வாய்ப்பையும், வறட்சியின் காரணமாக ஏற்படும் பயிர் இழப்புகளை குறைப்பதற்கான வாய்ப்புள்ளது. |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | சிவப்பு கூண்வண்டு தாக்கப்பட்ட மரங்களில் புழுக்கள் உட்சென்ற சிறிய துவாரத்தின் வழியே சிவப்புநீர் வடிந்து காய்ந்த பிசின் காணப்படும். மரத்தில் ஓட்டைகளும், ஓட்டைகள் வழியே திசுக்களைத் தின்ற பின் வெளியே தள்ளப்பட்ட மர நாறுகளும் காணப்படும். இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட பகுதிகளில் இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 1 மில்லி உடன் 1 மில்லி தண்ணீர் கலந்துசெலுத்தவும். |
| தென்னை | தென்னையில் காண்டாமிருக வண்டு பாதிப்பை தடுக்க நடுக்குருத்து பாகத்தில் (கொண்டை) மட்டை இடுக்குகளில் 3 அல்லது 4 அளவுள்ள அந்து உருண்டையை இட்டு மணலால் மூடவும் இதனை 45 நாட்களுக்கு ஒரு முறை இளம் கன்றுகளுக்கு மட்டை இடுக்குகளில் வைக்கவும்.ஒரு மண்பானையில் 5 லிட்டர் நீருடன் 1 கிலோ ஆமணக்கு புண்ணாக்கு சேர்த்த கலவையை தோப்பினில் வைத்தும் கவர்ந்து அழிக்கலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடை மருத்துவரின் ஆலோசனை பெற்று விவசாயிகள் கோமாரி, சப்பை மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசியை போட லாம் என அறிவுறுத்தப்படுகிறது. |

**உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை**

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடை மருத்துவரின் ஆலோசனை பெற்று விவசாயிகள் கோமாரி, சப்பை மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசியை போட லாம் என அறிவுறுத்தப்படுகிறது. |